[1982 மார்ச் 8

பேரையூரிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக் கட்டிடம்

* வினா எண் 408—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பேரையூரில் அரசு மேல்நிலைப்பள்ளியின் கட்டிடம் பழுதுபட்டிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இப்பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) இப்பள்ளியில் 8 வகுப்பறைகளைக் கொண்ட காரைக் கட்டடத்தின் மூன்று வகுப்பறைகளை அடக்கிய கிழக்குப் பகுதி பழுதுபட்ட நிலையில் உள்ளது. இதனைச் சீர்செய்வதற்கான மதிப்பீடுகள் பொதுப்பணித்துறையினரிடம் கோரப்பட்டன. ஆனால் அப்பள்ளி நிலம் குறித்த மண் வளத்தை ஆராய்ச்சி செய்ய வேண்டியிருப்பதால், அவ்வாராய்ச்சி முடிந்த பின்னரே தேவையான மதிப்பீடுகள் அனுப்பப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக இந்த பள்ளிக் கட்டிடம் பழுதுபட்ட நிலையில் இருக்கிறது; மாணவர்கள் தகுந்த பாதுகாப்போடு படிக்க முடியாத நிலை இருக்கிறது. வெளியில் தங்கி படிக்கவேண்டியிருக்கிறது. எனவே மண் வள ஆராய்ச்சி செய்வதோடு, அரசு தற்காலிகமாக வேறு ஏற்பாடு செய்து இந்த குறையைப் போக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் இருக்கும் பல்வேறு பள்ளிகளிலே இப்படி ஒருசில பள்ளிகள் இடிந்திருப்பதும், பள்ளிகளில் பல கட்டிடங்கள் இல்லாமல் இருப்பதும் அரசுக்குத் தெரியுமா ? மத்திய அரசிடமிருந்து கடனை பெற்று புதிய பள்ளிகளை கட்டுவதற்கும், இடிந்த பள்ளிகளை செப்பனிடுவதற்கும் அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமளவில் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் போதாமல் இருப்பதும், சில பள்ளிகளுக்கு கட்டிடமே இல்லாமல் இருப்பதும் குறித்த விவரங்களைச்

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சேகரித்து உடனடியாக 90 கோடி ரூபாய்க்கு செலவு செய்தால் அந்த குறைந்த பட்சத் தேவையை தீர்வு செய்ய முடியும் என்று அதிகாரிகள் அறிக்கை தந்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய தொகையை செலவு செய்கிற நிலையில் நாம் இல்லையென்றாலும் கடன் கிடைத்தால் அந்த தொகையை செலவு செய்வதற்கு முடியும் என்று கருதி கடன் தரக்கூடிய நிறுவனங்களை நாம் அணுகியிருக்கிறோம். மத்திய அரசினுடைய ஒத்துழைப்பைக் கேட்டிருக்கிறோம். அவர்கள் தக்க முடிவு எடுப்பார்களானால், இந்த பிரச்னை எளிதாக முடியும்.

விருத்தாசலம் தொகுதியிலுள்ள பள்ளிகளில் செயல்பட்டு வரும் மதிய உணவுத் திட்டம்

*வினா எண் 409.—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதியில் 105 பள்ளிகளில் மதிய உணவு மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்ததை ஜூன் 18 ஆம் தேதி முதல் 48 பள்ளிகளுக்கு மட்டும் வழங்கப்படுவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?

(இ) தற்போது அளிக்கப்படும் உணவு மிகவும் குறைவாக உள்ளது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) கடுமையான வறட்சியின் காரணமாக விருத்தாசலம் மத்திய சமையற்கூடத்தில் தண்ணீர் இல்லை. வெளியார் பம்பு செட்டிலிருந்து தண்ணீர் பெறுவதற்கும் சிரமங்கள் ஏற்பட்டன. சமையற்கூட ஊர்திகளில் ஒன்று பழுதாகி மாற்று ஏற்பாடாக மாட்டு வண்டி, சைக்கிள் மூலம் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யச் சற்று தாமதம் ஏற்பட்டது. ஆயினும் இந்த பிரச்னைகள் தீர்க்கப்பட்டு இப்பொழுது 1981 ஆகஸ்டு மாதம் முதல் 105 பள்ளிகளுக்கும் தொடர்ந்து உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

(இ) இந்தியா முழுவதும் நண்பகல் உணவுத் திட்டங்களுக்கு கேர் நிறுவனம் அளித்து வந்த இலவச உணவுப் பொருளை இந்த ஆண்டு கணிசமான அளவுக்குக் கேர் நிறுவனம் குறைத்ததன் காரணமாக உணவின் அளவை ஓரளவு குறைக்க நேரிட்டுள்ளது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதிய உணவு கொடுப்பதாக சொன்னார்கள். ஆனால் அங்கு சமையல் செய்வதற்கு ஆள் இல்லாமல் தலைமை ஆசிரியர் தவறு செய்வதும், அங்கு ஓராசிரியர் பள்ளிகளில் ஆசிரியர்கள் கேர் உதவியை